**செய்தி வெளியீடு எண்: 161** **நாள்: 02.03.2018**

## செய்தி வெளியீடு

தமிழக அரசு சார்பில் நடத்தப்படும் அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வுக்கான பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற மாணவ/மாணவியர்களில் இந்த வருடம் 2017– ல் மத்திய தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட இந்திய வனத்துறை அதிகாரிகளுக்கான (IFS) இறுதி நேர்முகத் தேர்வில் 10 மாணவ/மாணவியர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் இப்பயிற்சி மையத்தில் IAS, IPS, etc., போன்ற குடிமைப்பணி முதல்நிலைத் தேர்விற்கு 6 மாத கால பயிற்சியும், முதன்மைத் தேர்விற்கு 3 மாத கால பயிற்சியும் உதவித் தொகையுடன் கட்டணமில்லாமல் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதே போல் 2017ம் ஆண்டு இம்மையத்தில் இந்திய வனத்துறை அதிகாரி பணிக்கு 40 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது. அகில இந்திய அளவில் தேர்ச்சி பெற்ற 110 மாணவ/மாணவியர்களில் இம்மையத்தில் பயிற்சி பெற்ற 10 மாணவ/மாணவியர்கள் இந்திய வனத்துறை அதிகாரி பணிக்கு தேர்வாகியுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், இப்பயிற்சி மையத்தில் பயின்று, முதன்மைத் தேர்வில் வெற்றி பெற்ற 91 மாணவ/மாணவியர்கள் IAS, IPS போன்ற பல்வேறு பணிகளுக்காக நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள டெல்லி சென்றுள்ளனர். அம்மாணவர்களுக்கு உதவித் தொகையுடன் தமிழ்நாடு இல்லத்தில் தங்கும் வசதியும் தமிழ்நாடு அரசு செய்து கொடுத்துள்ளது .

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**